1993 ஏப்ரல் 22]

நிறுவனங்கள் நடத்துகிற பயிற்சி பெற்றவர்கள்தான் அதிகமாக வெற்றி பெற்று வருகிறார்கள். ராவ் சென்டர் மற்றும் சென்னையிலே கேத்தலிக் சென்டர் போன்ற உயர்ந்த பயிற்சி அளிக்கிற நிறுவனங்களில் பயிற்சி பெற்றோர் அதிகமாக வெற்றி பெறுகிறார்கள். அவர்களுக்கு படிப்பதற்கான எல்லா வசதிகளையும் இந்த தனியார் பயிற்சி நிறுவனங்கள் அளித்துக் கொண்டிருக்கிற நேரத்தில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் இந்தமாதிரியான வசதிகள் இல்லாத காரணத்தால், அதாவது அவர்களுக்கு படிப்பதற்கு ஏற்ற சூழ்நிலை இல்லாத காரணத்தால் அவர்கள் இந்த வெற்றி வாய்ப்பை இழக்கிற சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து அந்த உயர்ந்த பயிற்சி நிறுவனங்கள் நடத்துகிற பயிற்சிக்கு இணையாக அவர்களுக்கும் படிக்கின்ற அந்த 'அட்மாஸ்ஃபியர்' ஏற்படுத்திக்கொடுக்கிற அளவுக்கு ஒரு பயிற்சி மையத்தை இங்கே ஏற்படுத்தித் தருவார்களா என்றும், அதிக உதவித் தொகை கொடுக்க முன்வருவார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாணவர்களுக்கு உணவுக் கட்டணம் தருவதைக் காட்டிலும் அவர்களுக்கு அதிகமான அளவுக்கு உயர்த்தித் தரப்பட்டிருக்கிறது. இன்றைக்கு உள்ள நிதி நெருக்கடி காரணமாகத்தான் உயர்த்தலாம் என்ற எண்ணம் இருந்தும் கூட உயர்த்த முடியாத ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. எனவே, நிதி நிலைமைக்கு ஏற்ப அரசு முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் கருத்திற்கேற்ப அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 440, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

440—

தமிழ்ப்புத்தாண்டுக்கு கதர் துணிகளுக்கு சிறப்பு தள்ளுபடி

*12510—திரு. ஆ. சுப்புரத்தினம்:

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்ப்புத்தாண்டு தினத்தை முன்னிட்டு கதர் துணிகளுக்கு சிறப்புத் தள்ளுபடி கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழமையான கதர் தொழில் நலிவடையாமல் இருக்கவும், அந்தத் தொழிலாளர்களின் நிலையை உயர்த்தவும்தான் இதுபோன்ற தள்ளுபடிகள் வழங்கப்படுகின்றன. எனவே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய கதர் ஆணைக் குழுவிற்கு மாநில கதர் ஆணையம் வழியாக இந்தக் கோரிக்கையை வலியுறுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் பரிசீலனை செய்து மத்திய கதர் ஆணைக் குழுவிற்கு அனுப்பும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

குறுகிய கால வினா 3, திருமதி அ. தி. சரஸ்வதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

3—

சத்தியமங்கலம் தொகுதியில் புற்றுநோய் மருத்துவமனை அமைக்கும் திட்டம்.

*21036—திருமதி அ. தி. சரஸ்வதி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்தியமங்கலம் தொகுதியில் புற்றுநோய் மருத்துவமனை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,